بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *01/03/2024* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**உஹுது போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் உயிர்த்தியாகம், அன்ஸாரி பெண்களின் ஒப்பாரி, ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் உயிர்த்தியாகத்தின் போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துஆ மற்றும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபியாக்களின் முன்னுதாரணமான பங்களிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

**உஹுது போரின் நிலைமைகளை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காயமுற்றவர்களையும் ஷஹீதானவர்களையும் ஒன்று திரட்டினார்கள். காயமுற்றவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. ஷஹீதுகளை நல்லடக்கம் செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. காஃபிர்கள் சில சஹாபாவை ஷஹீதாக்கியது மட்டுமின்றி, அதற்கும் மேற்பட்டு, அவர்களுடைய காது மூக்கையும் அறுத்து விட்டார்கள் என்பது அப்பொழுது தெரிய வந்தது. இதைப் பார்த்து கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்களுக்குப் பெருந்துயரம் ஏற்பட்டது. ஷஹீதான இந்த மக்களில் அன்னாருடைய தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘எந்தப் பழிவாங்குதலை நாம் ஆகுமற்றது எனக் கருதி வந்தோமோ அதை காஃபிர்கள் சுயமே தங்களுடைய செயல்களால் தங்களுக்கு ஆகுமானதாக ஆக்கிக் கொண்டார்கள்.’ அப்பொழுது எல்லாம் வல்ல இறைவன் தரப்பிலிருந்து இவ்வாறு வஹீ இறங்கியது: காஃபிர்கள் என்ன செய்கிறார்களோ அவர்களை செய்ய விடுவீராக. நீர் கருணை மற்றும் நீதியை எப்பொழுதும் பற்றிப் பிடித்திருப்பீராக.

ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களின் நல்லடக்கம் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:- அவர்களை ஒரே துணியில் கஃபனிட்டார்கள். அவர்களது தலை மறைக்கப்படும் போது காலிலிருந்து துணி விலகிவிடும். கால்கள் மறைக்கப்படும் போது முகத்திலிருந்து துணி விலகிவிடும். இதனால் கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள், ‘அவர்களது முகத்தை மறைத்து விடுங்கள். கால்களை புற்களால் மறைத்து விடுங்கள்’ என்று கூறினார்கள்.

மரணித்தவர்கள் முன் அழுது புலம்பி ஒப்பாரி வைக்கும் வழக்கத்தை எந்த அளவுக்கு நுட்பமான முறையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள் என்பதைப் பார்ப்போம். ஓர் அறிவிப்பில் வருகிறது,

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது போரிலிருந்து திரும்பிய போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அன்ஸாரி பெண்கள் தங்களுடைய கணவர்களுக்காக அழுது ஒப்பாரி வைக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘இது என்ன! ஹஸ்ரத் ஹம்ஸாவுக்காக அழக்கூடியவர்கள் யாரும் இல்லையா?’ என்று வினவினார்கள். இந்த விஷயம் அன்ஸாரி பெண்களுக்குத் தெரிய வந்ததும் அவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீது ஆனதற்காக அழுது ஒப்பாரி வைப்பதற்காக ஒன்று கூடி விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு சிற்றுறக்கம் ஏற்பட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலிலேயே இருந்தார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்பெண்கள் சிறிது தொலைவில் இருந்தார்கள். அன்னார் கண் விழித்த போது பெண்கள் அவ்வாறே அழுது கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘இன்று இவர்கள் ஹம்ஸாவின் பெயரைக் கூறி அழுது கொண்டே இருப்பார்களா, நிறுத்த மாட்டார்களா? அவர்களிடம் திரும்பிச் செல்லுமாறு கூறுங்கள்’ என்று கூறினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு, ‘உங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுங்கள். இன்றைக்குப் பிறகு, மரணித்த எவர் மீதும் அழுது ஒப்பாரி வைக்கக்கூடாது’ என்று வழிகாட்டல் வழங்கினார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் நுட்பமான முறையில் அன்ஸாரி பெண்களின் உணர்வுகளைக் கருத்தில் கொண்டார்கள். அவர்களை அவர்களுடைய கணவன்மார்கள் மற்றும் சகோதரர்களின் பிரிவிற்காக அழுது புலம்புவதிலிருந்து தடுப்பதற்கு பதிலாக, ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைக் குறித்து அவர்களுக்காக அழக்கூடியவர்கள் யாரும் இல்லையா என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீது ஆனதனாலும், அவர்களுடைய உடல் அவமதிக்கப்பட்டதைப் பார்த்தும் பெருந் துயரம் ஏற்பட்டிருந்தது. ஆனால், அன்ஸாரி பெண்கள் இப்பொழுது இந்த ஒப்பாரியை நிறுத்தியபாடில்லை என்பதைக் கண்டதும், அதனால் ஒரு சம்பிரதாயமாகவே இருந்த அந்த வழக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தம்முடைய முன்மாதிரியை முன் வைத்து விட்டார்கள். மேலும், அவர்களுக்குப் பொறுமை காக்குமாறு வலியுறுத்தினார்கள். அதுவும் தாக்கம் ஏற்படுத்தும் வகையில் வலியுறுத்தினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களைப் பிரிந்து ஏற்பட்ட வேதனையைப் பொறுத்தவரை அது அன்னாருக்கு இறுதி வரை இருந்தது. எப்பொழுதும் அதைப் பற்றி கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களின் நல்லடக்கம் பற்றிய குறிப்பு இவ்வாறு கிடைக்கிறது: கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்களின் உடலுக்கு அருகில் சென்றடைந்தார்கள். அவர்களுடைய உடல் முகம் குப்புற இருந்தது. ஹுஸூர் (ஸல்) அவர்கள் அவர்களைப் பார்த்து ஓதிய திருக்குர்ஆன் வசனத்தின் பொருள் இதுவாகும்:

“நம்பிக்கை கொண்டவர்களில் எத்தகைய (சில) ஆண்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் எந்த விஷயத்தில் அல்லாஹ்விடம் உறுதி அளித்திருந்தார்களோ அதை உண்மைப்படுத்திக் காட்டினார்கள். அவர்களில் தாங்கள் வேண்டிக் கொண்டதை நிறைவேற்றியவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் இப்பொழுது (அதை எதிர்ப்பார்த்து) காத்துக்கொண்டிருப்பவர்களும் இருக்கிறார்கள்.”

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த வசனத்தை ஓதி இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் அனைவரும் கியாமத் நாளன்றும் இறைவன் முன்னிலையில் ஷஹீதுகள் ஆவீர்கள் என்று அல்லாஹ்வின் தூதர் சாட்சிபகர்கிறார்.

பிறகு, ஹுஸூர் (ஸல்) அவர்கள் சஹாபா பெருமக்களுக்கு இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்: அவர்களுடைய கப்ருகளை சென்று பார்த்து அவர்களுக்கு சலாத்தினை அனுப்புங்கள். என் உயிர் எவன் கையில் இருக்கிறதோ அவன் மீது ஆணையாக! கியாமத் நாள் வரை எவர் அவர்கள் மீது சலாம் கூறினாலும் அவர்கள் அவருடைய சலாத்துக்கு பதில் அளிப்பார்கள்.

உஹுது நாளன்று கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் ஷஹீதுமார்களை நல்லடக்கம் செய்த பிறகு, மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி இவ்வாறு துஆ செய்தார்கள்:

அல்லாஹ்வே! எல்லாப் புகழும் உனக்கே உரித்தாகும். அல்லாஹ்வே! நீ விரிவடையச் செய்யக்கூடியதை தடுப்பவர் எவருமில்லை. நீ பிடிப்பதை விரிவடையச் செய்பவர் எவருமில்லை. நீ வழிதவற விட்டவனுக்கு நேர்வழி வழங்குபவன் எவனுமில்லை. நீ நேர்வழி வழங்கியவனை வழிகெடுப்பவன் எவனுமில்லை, நீ தடுப்பவற்றை வழங்குபவன் எவனுமில்லை. நீ வழங்குவதைத் தடுப்பவன் எவனுமில்லை. நீ தொலைவில் கொண்டு செல்வதை அருகில் கொண்டு வருபவன் எவனுமில்லை. நீ அருகில் கொண்டு வருவதை தொலைவில் கொண்டு செல்பவன் எவனுமில்லை......

அல்லாஹ்வே! நாங்கள் முஸ்லிம்களாக இருக்கும் நிலையில் எங்களை மரணமடையச் செய்வாயாக! நாங்கள் முஸ்லிம்களாக இருக்கும் நிலையில் எங்களை உயிர்த்தெழச் செய்வாயாக! நாங்கள் இழிவடையாத வண்ணமும், குழப்பத்தில் மூழ்காத வண்ணமும் எங்களை நல்லவர்களுடன் இணைத்து விடுவாயாக! அல்லாஹ்வே! உண்மையான வணக்கத்திற்குரியவனே! உன்னுடைய தூதர்களைப் பொய்ப்பிக்கக்கூடிய, உன் வழியில் இருந்து

தடுக்கக்கூடிய நிராகரிப்பாளர்களை அழித்து விடுவாயாக! அவர்கள் மீது உனது தண்டனையையும் இறக்குவாயாக! அல்லாஹ்வே! வேதத்தை உடைய நிராகரிப்பாளர்களை அழித்து விடுவாயாக! ஆமீன்.

உஹுது போரில் பெண்களும் ஆண்களுடன் தோளோடு தோளாக தொண்டாற்றுவதில் பெரும் பங்காற்றினார்கள். ஹஸ்ரத் உம்மு சலமா (ரலி) அவர்கள் உஹுது போரில் கலந்து கொண்டது பற்றிய குறிப்பு கிடைக்கிறது. அறிவிப்பாளர் கூறுகிறார்: உஹுது நாளன்று நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களையும் உம்மு சலமா (ரலி) அவர்களையும் கண்டேன். அவர்கள் தண்ணீர்ப்பையில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு தாகித்தவர்களுக்கு அருந்தக் கொடுப்பார்கள்.

ஹஸ்ரத் அபூ ஸயீது ஃஹுத்ரீ (ரலி) அவர்களின் தாயார் உம்மு சலீத் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உம்மு அதிய்யா (ரலி) அவர்கள் தொடர்பாகவும் இவ்வாறே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறே, சில முஸ்லிம் பெண்கள் ஈட்டி மற்றும் வாளைக் கொண்டு நிராகரிப்பாளர்களுடன் நேருக்கு நேர் போர் புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் அனைவரிலும் முன்னிலை வகிக்கிறார்கள். பிறகு, ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்களின் காயங்களைக் கழுவிய குறிப்பும் கிடைக்கிறது.

இவ்வாறே, ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உஹுது போரின் நிலைமைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மற்ற சில பெண்களுடன் வீட்டிலிருந்து புறப்பட்டார்கள். அவர்கள் வழியில் ஹிந்த் பின்த் அம்ர் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். ஹிந்த் அப்துல்லாஹ் பின் அமர் (ரலி) அவர்களின் சகோதரி ஆவார்கள். இவர்கள் தனது ஒட்டகத்தை ஓட்டி வந்து கொண்டிருந்தார்கள். அந்த ஒட்டகத்தில் ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) அவர்களின் கணவர், மகன் மற்றும் சகோதரரின் உடல்கள் இருந்தன.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவர்களிடம் போர்க்களத்தின் நிலைமையைப் பற்றி விசாரித்தார்கள். அப்பொழுது ஹஸ்ரத் ஹிந்த் (ரலி) அவர்கள், ‘ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நலமாக இருக்கிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இருப்பதனால் எல்லா சிரமங்களும் எளிமையாகி விடும்’ என்று பதிலளித்தார்கள்.

தன் கணவர், மகன் மற்றும் சகோதரர் எனத் தன்னுடைய மூன்று நெருங்கிய உறவினர்களுடைய உடல்களை சுமந்து கொண்டு வருகிறார்கள். ஆனால், விசாரிக்கும் போது, ‘ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நலமாக இருக்கிறார்கள். எனவே, அனைத்தும் நலம்தான். இவர்களையோ நான் இப்பொழுது நல்லடக்கம் செய்தே விடுவேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நலமுடன் இருக்கிறார்கள் எனும்போது, இது பெரிய விஷயமே இல்லையே’ என்று கூறுகிறார்கள்.

ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உஹுது போரில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் விரல் விட்டு எண்ணக்கூடிய

அளவிலான சஹாபா எஞ்சியிருந்து விட்ட போது, நான் ஓடிப் போய் ஹுஸூர் (ஸல்) அவர்களைச் சென்றடைந்தேன். வாளைக் கொண்டு நிராகரிப்பாளர்களை அன்னாருக்கு அருகில் வரவிடாமல் தடுத்தேன். அத்துடன் வில்லால் அம்புகளையும் விடுத்தேன். எதுவரை எனில், நானும் காயமடைந்து விட்டேன்.

ஹஸ்ரத் உம்மு அய்மன் (ரலி) அவர்கள் காயமுற்றவர்களுக்குத் தண்ணீர் அருந்தக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது இணைவைப்பாளன் ஒருவன் அவர்களை நோக்கி அம்பு விடுத்தான். அது அவர்களின் தோள்பட்டையில் சென்று தைத்தது. இதைப் பார்த்த அந்த காஃபிர் சிரிக்க ஆரம்பித்தான். இதனால் கண்ணியத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃது பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களுக்கு ஓர் அம்பைக் கொடுத்தார்கள். அதற்கு முனை இருக்கவில்லை. ஹஸ்ரத் சஃது (ரலி) அவர்கள் அந்த அம்பை எய்தினார்கள். அந்த அம்பு அந்த காஃபிர் மீது பட்டது. அவன் பின்னால் சென்று விழுந்தான். அதனால் அவனுடைய ஆடை விலகி உடல் அங்கம் வெளிப்பட்டது. இதனால் கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் புன்சிரித்தார்கள்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ் புரிந்த பேரருளின் காரணமாக புன்சிரித்தார்கள். அதாவது, இறைவன் அந்த நிராகரிப்பாளனை எப்படிப்பட்ட ஓர் அம்பை வைத்து வழியிலிருந்து விலக்கினான் என்றால், அதற்கு முனைகூட இருக்கவில்லை. ஒரு வகையில் அது ஒரு நேரான கம்பாக இருந்தது. அதுவே அந்த நிராகரிப்பாளனைக் கொன்று விட்டது.

ஓர் எழுத்தாளர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வீரம் மற்றும் புத்திக்கூர்மையைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு எழுதுகிறார்: காலித் பின் வலீத் அவர்களின் தலைமையில் குறைஷிய குதிரை வீரர்கள் அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரலி) அவர்கள் மற்றும் அவர்களுடன் இருந்தவர்களை ஷஹீது ஆக்கியவாறு இஸ்லாமிய படையின் பின் பக்கம் தோன்றினார்கள்.

அப்பொழுது சோதனைக்குரிய அந்தப் பொழுதில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சிறப்பும், நிகரற்ற வீரமும் தெள்ளத்தெளிவாக வெளிப்பட்டது. ஏனெனில், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமது உயிரை ஆபத்தில் ஆழ்த்திக் கொண்டு சஹாபா பெருமக்களின் உயிர்களைக் காப்பாற்ற தீர்மானித்தார்கள். மேலும், மிகவும் உரத்த குரலில் சஹாபாவைப் பார்த்து, 'அல்லாஹ்வின் அடியார்களே! இதோ இங்கே(வாருங்கள்)!' என்று அழைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குரல் முழு மைதானத்திலும் எதிரொலித்தது.

சஹாபா பெருமக்களும் நெருக்கடியான நிலைமையை உணர்ந்து கொண்டார்கள். ஏனெனில், அவர்கள் மிகவும் தொலைவில் இருந்தார்கள். எனவே, அவர்கள் வந்தடைவதற்கு முன்பு குறைஷியர்களின் குதிரை வீரர்களின் ஒரு படைக்குழு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டது. மற்ற குதிரை வீரர்கள் வேகமாக முஸ்லிம்களை சூழ்ந்து கொள்ள ஆரம்பித்தார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காயமடைந்திருந்த நிலையிலும் சுய நினைவுடன் இருந்து சஹாபாவுக்கு வழிகாட்டி அவர்களுக்கு ஊக்கமளித்தது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. உத்பா பின் அபீ வக்காஸ் என்பவன் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஓங்கி ஒரு கல்லை எறிந்தான். அது அன்னாருடைய முகத்தில் பட்டது. அன்னாருடைய முன் இரு பற்களுக்கும் கூரான பல்லுக்கும் இடையில் உள்ள பல் உடைந்து விட்டது. அத்துடன் அதனால் கீழ் உதடும் கிழிந்து விட்டது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உத்பா பின் அபீ வக்காஸுக்கு எதிராக இவ்வாறு துஆ செய்தார்கள்: 'அல்லாஹ்வே! ஓராண்டு கழிவதற்குள்ளேயே இவனுக்கு நிராகரிப்பாளனாக இருக்கும் நிலையிலேயே மரணத்தை அளிப்பாயாக!'

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னார் செய்த இந்த துஆவை ஏற்றுக் கொண்டான். மேலும், அவனை அன்றே ஹாத்திப் பின் அபீ பல்தஆ கொன்று விட்டார்கள்.

*குத்பாவின் இரண்டாவது பகுதியில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சிரியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய* **ஃகுஸ்ஸான் காலித் அந்நக்கீப் சாஹிப் அவர்கள்**, *Archives and Al Hakam* **துறையைச் சேர்ந்த இயக்கத்தின் முரப்பி** *மதிப்பிற்குரிய ஜலீஸ் அஹ்மத் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய* **நவ் ஷாபா முபாரக் சாஹிபா**, *ரப்வாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய அப்துல் ஹமீது கான் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய* **ரஸிய்யா சுல்தானா சாஹிபா** *அவர்கள், லாஹூரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் முஹம்மத் சலீம் சாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய* **புஷ்ரா பேகம் சாஹிபா** *அவர்கள் மற்றும் நார்வேவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய* **ரஷீத் அஹ்மத் சௌத்ரீ சாஹிப்** *அவர்கள் ஆகிய மர்ஹூம்களின் நற்குறிப்புகளை எடுத்துரைத்தார்கள். மேலும், இவர்களுக்கு ஜனாஸா காயிப் தொழுகை தொழ வைப்பதாக அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰی وَيَنْهٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**